JETIR.ORG ISSN: 2349-5162 | ESTD Year : 2014 | Monthly Issue
JOURNAL OF EMERGING TECHNOLOGIES AND INNOVATIVE RESEARCH (JETIR)
An International Scholarly Open Access, Peer-reviewed, Refereed Journal

# மானுடவியல் தளத்தில் கைக்கிளை ஆய்வு

**An Anthropological Study of Kaikkilai (Unrequited Love)**

**ஆய்வாளர்: திரு.மோ.மோகன் ராஜ்**
**முனைவர் பட்ட ஆய்வாளர்(முழுநேரம்) தமிழ்த்துறை**
**திரு.வி.க அரசு கலைக்கல்லூரி, திருவாரூர்-610003**
**பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி (இணைவுபெற்றது.)**

**நெறியாளர்: முனைவர்.சோ.கோதண்டராமன்,**
**இணைப்பேராசிரியர் (ம)ஆய்வுநெறியாளர் தமிழ்த்துறை**
**திருவி.க அரசு கலைக்கல்லூரி, திருவாரூர்-610003**
**பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி (இணைவுபெற்றது.)**

**ஆய்வுச் சுருக்கம்:**

செவ்வியல் தமிழ் இலக்கண மரபில் அகவுணர்வுகள் அகத்திணைக் கோட்பாடாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. பரஸ்பர அன்பையும் பாலியல் ஒத்திசைவையும் நிலைநிறுத்தும் தலைவன்-தலைவி உறவை 'அன்பின் ஐந்திணை' என ஏற்கும் தொல்காப்பியம், ஒருதலைக்காமத்தைக் 'கைக்கிளை' எனத் திணைப்புறமாக அன்பின் ஐந்திணைக்கு வெளியே நிறுத்துகிறது. இலக்கிய அழகியல் தளத்தில் கைக்கிளை ஒரு தனித்துவமான மனவெழுச்சிக் கவிதை வடிவமாக அணுகப்பட்டாலும், பண்பாட்டு மானுடவியல் (Cultural Anthropology), பாலின அரசியல் (Gender Politics) மற்றும் பரிணாம நடத்தை நெறிகளின் வழி நோக்கும்போது, அது பண்டைத் தமிழ்ச் சமூகத்தின் அதிகாரப் படிநிலைகள், பருவநிலை மாற்றச் சடங்குகள் (Rites of Passage), சம்மதம் (Consent) சார்ந்த இடைவெளிகள் மற்றும் குடும்ப நிறுவனக் கட்டுப்பாடுகளின் ஆவணமாக வெளிப்படுகிறது. இவ்வாய்வுக் கட்டுரை,

தொல்காப்பிய மூல நூற்பாக்கள், உரையாசிரியர்களின் உரைவிளக்கங்கள் மற்றும் கலித்தொகைப் பாடல்களை முதன்மைத் தரவுகளாகக் கொண்டு, மானுடவியல் மற்றும் சமூகவியல் அறிஞர்களான **அர்னால்ட் வான் ஜென்னப், மிஷேல் ஃபூக்கோ, கிளாட் லெவி-ஸ்ட்ராஸ், நா. வானமாமலை** மற்றும் **பக்தவத்சல பாரதி** ஆகியோரின் நூல்களிலிருந்து நேரடி மேற்கோள்களை எடுத்து முன்வைத்து, கைக்கிளையை ஒரு முழுமையான மானுடவியல் ஆவணமாக நிறுவுகிறது.

Abstract:

In the classical Tamil grammatical tradition, internal emotions and intimate experiences are systematized under the theory of Akattinai (interior landscape). While Tolkappiyam recognizes the relationship between the hero and heroine grounded in mutual love and sexual harmony as **Anbin Ainthinai** (the five stages of mutual love), it marginalizes unrequited love as **Kaikkilai**, relegating it outside this ideal core (Thinaippuram / external genre). Although Kaikkilai has been approached within literary aesthetics as a distinct poetic form of emotional intensity, examining it through the lenses of Cultural Anthropology, Gender Politics, and evolutionary behavioral norms reveals it as a cultural document reflecting ancient Tamil society's power hierarchies, rites of passage, gaps surrounding consent, and the institutional constraints of kinship and family. Drawing primarily upon the original verses (nurpas) of Tolkappiyam, canonical commentaries, and poems from Kalittokai, and incorporating direct citations from the works of anthropologists and social theorists such as Arnold van Gennep, Michel Foucault, Claude Lévi-Strauss, N. Vanamamalai, and Bhaktavatsala Bharati, this research paper establishes Kaikkilai as a comprehensive anthropological document.

**திறவுச்சொற்கள்:** கைக்கிளை, பண்பாட்டு மானுடவியல், தொல்காப்பியம், அதிகாரப் படிநிலை, சம்மதம், இணைத்தேர்வு

## முன்னுரை:

தொல்காப்பியப் பொருளதிகாரம் மனித வாழ்வியல் நடத்தைகளை அகம், புறம் என இரு பெரும் கூறுகளாகப் பகுத்து, அகத்தினை ஏழாக வகைப்படுத்துகிறது.

**"கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்**
**முற்படக் கிளந்த எழுதிணை என்ப"** (தொல்.பொருள். நூற்பா.1)

அவற்றுள் ஒத்த அன்புடைய தலைவன்-தலைவி உறவை மட்டுமே ஐந்திணைகளாக ஏற்கும் இலக்கண மரபு, ஒருதலைக்காமத்தைக் கைக்கிளை என அன்பின் ஐந்திணைக்கு வெளியே நிறுத்துகிறது. இச்சொல்லின் அமைப்பியல் மற்றும் சமூகப் பொருள் குறித்துப் பேராசிரியர் **நா. வானமாமலை** பின்வருமாறு நேரடியாகக் குறிப்பிடுகிறார்.

**"கை என்பது சிறுமை கிளை என்பது பகுதி அல்லது உறவு. ஆகவே கைக்கிளை என்பது ஒருதலைக்காமம் என்ற சிறுமை ஒழுக்கத்தைக் குறிக்கும் குறியீடாயிற்று. சமூகம் அங்கீகரித்த குடும்ப அமைப்பிற்குள் நுழைய முடியாத, ஒருதலைப்பட்சமான பாலியல் உணர்ச்சியையே இலக்கிய இலக்கணம் இவ்வாறு வரையறுத்தது."** (நா. வானமாமலை, தமிழர் பண்பாடும் தத்துவமும்,1980 பக். 79)

மானுடவியல் நோக்கில், இலக்கிய இலக்கணங்கள் என்பவை வெறுமனே கற்பனை நயங்கள் மட்டுமல்ல. அவை ஒரு குறிப்பிட்ட வரலாற்றுச் சூழலில் வாழ்ந்த சமூகத்தின் நடத்தை நெறிகள்,பாலியல் கட்டுப்பாடுகள் மற்றும் அதிகாரப் பகிர்வுகளை ஒழுங்குபடுத்தும் பண்பாட்டுக் கருவிகளாகும். அவ்வகையில், கைக்கிளை என்பது தூய அகவுணர்வின் வெளிப்பாடு என்பதைக் கடந்து, தொல் தமிழ்ச்சமூகத்தில் நிலவிய பாலின அதிகாரம், பருவ முதிர்ச்சியின்மை மற்றும் விளிம்புநிலை ஆசைகளின் வடிகாலாக எவ்வாறு செயல்பட்டது என்பதை விரிவாக ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கம்.

**மானுடவியல் அறிமுகம்:**

'மானுடவியல்' என்பது மானுடத்தின் தோற்றம், படிநிலை வளர்ச்சி, பண்பாட்டுப் பரிமாணம் ஆகியவற்றை நுணுகி ஆராயும் ஓர் ஒருங்கிணைந்த புலமைத் துறையாகும். ஆங்கிலத்தில் இத்துறைக்கு வழங்கப்படும் Anthropology என்ற கலைச்சொல், Anthropos (மனிதன்), Logos (ஒழுங்குமுறைப்பட்ட அறிவு) என்னும் இரு மூலக் கிரேக்கச் சொற்களிலிருந்து பெறப்பட்டதாகும். வரலாற்றுப் போக்கில் இச்சொல், மனிதனை அவனது உயிரியல் சூழமைவிலும் கலாச்சாரப் பின்புலத்திலும் ஒருசேர வைத்துப் பகுப்பாய்வு செய்யும் அறிவுத்துறையைக் குறிக்கும் குறியீடாக நிலைபெற்றது.

இக்கருத்தின் நீட்சியாக, **மெல்வின்** மற்றும் **கரோல் எம்பர்** (Melvin & Carol Ember) இத்துறையின் உலகளாவிய பரப்பளவை விளக்கும்பொழுது, **"எல்லா காலங்களிலும், உலகின் அனைத்துப் பகுதிகளிலும் வாழ்ந்த, வாழ்கின்ற மனித இனம் மற்றும் அதன் தொல்மரபுகள், பண்பாடுகளை முழுதளாவிய பார்வையில் பயில்வதே மானுடவியல்"** என நிறுவுகின்றார். (Melvin & Carol Ember.2007.p.3)

சமூக அறிவியலின் பிற துறைகள் மனித வாழ்வின் குறிப்பிட்ட ஏதேனும் ஒரு கூறினை (பொருளாதாரம், அரசியல், உளவியல் போன்றவை)

தனித்துப் பகுப்பாய்வு செய்கையில், மானுடவியல் மட்டுமே மனிதனை ஒரு முழுதளாவிய இருத்தலாக அணுகுகிறது. மனிதனின் மரபணு மற்றும் உடலமைப்பியல் மாற்றங்கள் தொடங்கி, அவன் கட்டமைத்த மொழிகள், நம்பிக்கைகள், சடங்குகள், குடும்பம் மற்றும் அரசு வரையிலான அனைத்துப் பரிமாணங்களையும் கால-இட எல்லைகளுக்கு அப்பால் ஆராய்வதே இதன் தனிச்சிறப்பாகும்.

## பருவநிலை மாற்றங்களும் விளிம்புநிலையும்:

பண்பாட்டு மானுடவியலாளர் ‘**அர்னால்ட் வான் ஜென்னப்**’ (Arnold van Gennep) மனிதனின் வாழ்க்கைச் சுழற்சியில் நிகழும் நிலைமாற்றங்களை '**பருவநிலை மாற்றச் சடங்குகள்**' (Rites of Passage) என்ற கோட்பாட்டின் மூலம் விளக்குகிறார். அவர் மனிதப் பருவ மாற்றங்களை மூன்று படிநிலைகளாகப் பிரிக்கிறார்:

1. பழைய நிலையிலிருந்து பிரிதல் (Separation)
2. இடைநிலை அல்லது விளிம்புநிலை (Liminality)
3. புதிய சமூகத் தகுதியுடன் மீண்டும் இணைதல் (Aggregation)

இக்கோட்பாட்டின் மையக் கருத்தான இடைநிலை (Liminality) பற்றிக் குறிப்பிடும் போது ‘**வான் ஜென்னப்**’ தனது நூலில் பின்வருமாறு கூறுகிறார். "**இடைநிலை/விளிம்புநிலை என்பது ஓர் தெளிவற்ற நிலையாகும்; இதில் ஒரு தனிநபர் தனது முந்தைய நிலையிலிருந்து விடுபட்டு, ஆனால் சமூக வாழ்வோடு முழுமையாகப் பிணைக்கப்படும் இறுதியான நிலையை இன்னும் எட்டாமல் இடைப்பட்ட விளிம்பில் நிற்கிறார்.**" (Van Gennep,1960, p. 21)

("The transitional stage (liminality) is characterized by an ambiguous state, where the individual is stripped of their previous status and is suspended between states, not having reached the final integration into societal life." ) (மூலம்)

தொல்காப்பிய அகத்திணையியலில் கைக்கிளைக்கான இலக்கணம் வகுக்கும் நூற்பா, இந்த விளிம்புநிலைப் பண்பைப் பெண் உடலின் வழியாகப் பதிவு செய்கிறது.

**"காமம் சாலா இளமையோள்வயின்**

**ஏமம் சாலா இடும்பை எய்தி**

**நன்மையும் தீமையும் என்றுஇரு வகையால்**

**தன்ஒடும் அவளொடும் தருக்கிய புணர்த்து**

**சொல்-எதிர் பெறாஅன் சொல்லி இன்புறல்**

**புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே"** (தொல். பொருள்.50)

தொல்காப்பியர் கையாளும் '**காமம் சாலா இளமையோள்**' என்ற சொல்லாடலுக்கு உரையாசிரியர் **நச்சினார்க்கினியர்** அளிக்கும் விளக்கம், **வான் ஜென்னப்** குறிப்பிடும் பாலியல் முதிர்ச்சியற்ற விளிம்புநிலையை நேரடியாக உறுதிப்படுத்துகிறது. "**காமம் சாலா இளமையோள் என்பது காம நுகர்ச்சிக்குரிய பருவம் எய்தாத பேதை, பெதும்பைப் பருவத்து நின்ற சிறுமி என்றவாறு. அவளிடத்தில் தோன்றும் விருப்பம் அவளது இசைவு பெறாததாகவே முடியும்.**" (நச்சினார்க்கினியர் , 1964, பக். 112)

பண்டைக்கால வகைப்பாட்டின்படி:

- **பேதை:** ஐந்து முதல் ஏழு வயது வரை; பாலியல் மற்றும் உடலியல் மாற்றங்களை அறியாத நிலை.
- **பெதும்பை:** எட்டு முதல் பதினொரு வயது வரை; உடலியல் மாற்றங்களின் தொடக்க நிலை.

இப்பருவப் பெண்களிடம் தோன்றும் ஆண் வேட்கையைக் கலித்தொகையின் நெய்தற்கலிப் பாடல் மிக நுட்பமாகக் காட்சிப்படுத்துகிறது.

**"அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தாய் பேதாய்!**

**செறிவளை முன்கை பிடிமுறை சுற்ற,**

**அறியாய் போலத் திரியால்; மற்று என்னை**

**உறுவது அறியாதாய் போல..."** (*கலித்தொகை*, பாடல் 56, 1938, பக். 142)

விளையாடும் சிறுமியின் வளையலணிந்த கையைப் பற்றி ஆண் தனது காமத்தை வெளிப்படுத்துவதும், அதற்கு அச்சிறுமி மருள்வதும் இங்குப் பதிவாகிறது. '**வான் ஜென்னப்பின்**' கோட்பாட்டின்படி, அச்சிறுமி குழந்தைமைக்கும் முழுமையான பெண்ணிய சமூக முதிர்ச்சிக்கும் இடைப்பட்ட விளிம்புநிலையில் (Liminal phase) உள்ளாள். அவளது இந்த உடலியல் மற்றும் உளவியல் அறியாமையை ஆண் தனது பாலியல் நுகர்வுக்கான வாய்ப்பாக மாற்ற முனைவது, மானுடவியல் தளத்தில் பண்பாட்டு முதிர்ச்சியடையாத ஆதிக்கப் பதிவாகவே அடையாளப்படுத்தப்படுகிறது.

### அதிகாரப் படிநிலை:

சமூகவியல் அறிஞர் **மிஷேல் ஃபூக்கோ** (Michel Foucault) தனது **'The History of Sexuality'** நூலில், பாலியல் நடத்தைகளில் செயல்படும் அதிகாரம் குறித்துப் பின்வருமாறு கூறுகிறார். "**பாலியல் என்பது அதிகாரம் கட்டுப்படுத்த முயலும் இயற்கையான ஒன்று என எண்ணப்படக் கூடாது. அது ஒரு வரலாற்று ரீதியான கட்டமைப்பு; உடல்களைத் தூண்டுதல், இன்பத்தை அதிகரித்தல், உரையாடலைத் தோற்றுவித்தல் மற்றும் கட்டுப்பாடுகளை வலுப்படுத்துதல் ஆகிய அனைத்தும் அதிகார உத்திகளோடு பிணைக்கப்பட்டுள்ள ஒரு பெரும் வலைப்பின்னலாகும்.**" (Foucault, *The History of Sexuality*, *Vol. 1*, 1990, p. 105-106)

("Sexuality must not be thought of as a kind of natural given which power tries to hold in check... It is the name that can be given to a historical construct: not a furtive reality that is difficult to grasp, but a great surface network in which the stimulation of bodies, the intensification of pleasures, the incitement to discourse, the formation of special knowledges, the strengthening of controls and resistances, are linked to one another, in accordance with a few major strategies of knowledge and power." ) (மூலம்)

ஃபூக்கோ சுட்டிக்காட்டும் இந்த அதிகார உத்தியின்படி, கைக்கிளையில் ஆண் அதிகார மையமாகவும் பெண் அதிகாரமற்ற விளிம்பாகவும் நிறுத்தப்படுகிறாள்.

சங்க காலச் சமுதாயத்தில் தாய்வழிச் சமூக எச்சங்களிலிருந்து தந்தைவழி நிலவுடைமைச் சமூகமாகப் பரிணாமம் அடைந்த வரலாற்றுக் காலகட்டம் குறித்து ஆய்வாளர் க. கைலாசபதி பின்வருமாறு பதிவு செய்கிறார்."**தாய்வழிச் சமூக அமைப்பின் எச்சங்கள் சங்க காலத்திலும் காணப்படினும், நிலவுடைமை மற்றும் போர்க்குடி**

**மரபுகளின் வளர்ச்சியானது ஆணின் மேலாதிக்கத்தையும், பெண் உடலின் மீதான குடும்ப-ஆணாதிக்க அதிகாரத்தையும் வேகமாக நிலைநிறுத்தியது."** (கைலாசபதி, *பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்*, 1966, பக். 138)

இவ்வகையில் கைக்கிளையில் '**சம்மதம்**' (Consent) என்பது சாத்தியமற்றுப் போகிறது. அதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன.

1. பெண் உடலியல் மற்றும் உளவியல் ரீதியாகச் சம்மதம் அளிக்கும் விழிப்புணர்வு பெறாத அறியாப் பருவத்தினளாக இருத்தல்.
2. கைக்கிளைப் பாடல்களில் ஆண் மட்டுமே பேசும் கர்த்தாவாக (Subject) இருக்கிறான். பெண் பேசப்படும் நுகர்வுப் பொருளாக (Object) மட்டுமே சுருக்கப்படுகிறாள். ஆணின் வேட்கையே இலக்கியச் சொல்லாடலாக மாறுகிறது.

**இணைத்தேர்வும் உறவுமுறை ஒப்பந்தமும்:**

மானுடவியலாளர் **கிளாட் லெவி-ஸ்ட்ராஸ்** (Claude Levi-Strauss) தனது **'The Elementary Structures of Kinship'** நூலில் மனித பண்பாட்டின் உறவுமுறை ஒப்பந்தம் குறித்துப் பின்வருமாறு குறிப்பிடுகிறார். **"பெண்களின் பரிமாற்றம் என்பது சமூகப் பரஸ்பரத்தின் அடிப்படைக் கட்டமைப்பாகவும், மனிதன் இயற்கையிலிருந்து பண்பாட்டிற்கு நகர்வதற்கான முதன்மை நிபந்தனையாகவும் அமைகிறது. அதுவே சமூகக் குழுக்களுக்கு இடையே ஒற்றுமையையும் சமூகப் பிணைப்பையும் உருவாக்குகிறது."** (Levi-Strauss, The Elementary Structures of Kinship, 1969, p. 481)

("The exchange of women is the basic mechanism of all reciprocity and the primary condition for the transition from nature to culture... It establishes between groups a certain social solidarity.") (மூலம்)

**லெவி-ஸ்ட்ராஸ்** நிறுவும் இந்தப் பரஸ்பரப் பரிமாற்றமும் (Reciprocity) சமூக ஒப்பந்தமும் **கைக்கிளையில் முழுமையாக முறிந்துபோகிறது**. கைக்கிளையில் இருதரப்பு உடன்பாடோ அல்லது குலங்களுக்கு இடையேயான சமரசமோ சாத்தியமில்லை; ஏனெனில் அங்குப் பெண் அறியாப் பருவத்தினள்.

சமூக மானுடவியலாளர் **பக்தவத்சல பாரதி** இது பற்றிக் குறிப்பிடும் போது **"பண்பாட்டின் சமூக விதிகள் எப்போதுமே குடும்பக் கட்டமைப்பைப் பலப்படுத்தும் உறவுகளையே முதன்மைப்படுத்தும். பரஸ்பரப் பரிமாற்றமற்ற, சமூக உற்பத்திக்கு உதவாத தனிமனிதப் பாலியல் விலகல்களைச் சமூகம் ஒருபோதும் தனது முதன்மை அமைப்பாக ஏற்காது; மாறாக அதை விளிம்பில் மட்டுமே வைக்கும்."** (பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானுடவியல், 2003, பக். 219)

தொல்காப்பியர் கைக்கிளையை அன்பின் ஐந்திணைக்குள் சேர்க்காமல், 'திணைப்புறம்' எனப் புறத்திணைக்கு இணையாக அன்பின் ஐந்திணைக்கு வெளியே நிறுத்தி வைத்தமைக்குப் பின்னால் இத்தகைய சமூக நிறுவனப் பாதுகாப்பு விதிகளே செயல்பட்டுள்ளன.

**முடிவுரை:**

சங்க இலக்கிய அகத்திணை மரபில் 'கைக்கிளை' என்பது ஒருதலைக் காதலின் கவித்துவ ஏக்கம் மட்டுமல்ல. அது தொல் தமிழ்ச்சமூகத்தின் பாலின அதிகாரம், உடலியல் அரசியல் மற்றும் சமூக நிறுவனக் கட்டுப்பாடுகளை ஒருங்கே வெளிப்படுத்தும் மானுடவியல் ஆவணமாகும்.

மிகேல் ஃபூக்கோ நிறுவும் அதிகாரக் கோட்பாட்டின்படி, சம்மதம் என்ற தகுதியற்ற விளிம்புநிலைப் பெண்ணின் மீது ஆணின் குரல் மட்டுமே ஓங்கி ஒலிக்கும் அதிகார சமநிலையின்மையை இத்திணை வெளிப்படுத்துகிறது.

கிளாட் லெவி-ஸ்ட்ராஸ் மற்றும் பக்தவத்சல பாரதி விளக்கும் சமூக ஒப்பந்தமும் குடும்ப நிறுவன உருவாக்கமும் இதில் சாத்தியப்படாததால், சமூகம் கைக்கிளையை 'அன்பின் ஐந்திணை'க்குள் அனுமதிக்காமல் 'திணைப்புறம்' என எல்லை வகுத்து ஒருதலைப்பட்சமான, அறியாப் பருவத்தின் மீதான ஈர்ப்பு விலக்கப்பட வேண்டிய புற ஒழுக்கம் என நிறுவுகிறது.

இவ்வகையில், இலக்கிய இலக்கணங்களை அழகியல் தளத்திலிருந்து விடுவித்து மானுடவியல் மற்றும் அதிகாரக் கோட்பாடுகளின் துணையோடு அணுகும்போது, பண்டைத் தமிழகத்தில் நிலவிய பாலின

அதிகாரம், பாலியல் தடைகள் மற்றும் சமூக ஒழுங்கு எவ்வாறு கட்டமைக்கப்பட்டன என்பதை ஆழமாக விளங்கிக்கொள்ள முடிகிறது.

**துணைநூற் பட்டியல் (References):**


1. கலித்தொகை. உ. வே. சாமிநாதையர் பதிப்பு, கபீர் அச்சுக்கூடம், சென்னை, 1938.
2. கைலாசபதி, க. பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும். பாரி நிலையம், சென்னை, 1966.
3. தொல்காப்பியர். தொல்காப்பியம்: பொருளதிகாரம் (இளம்பூரணர் உரை). சாரதா பதிப்பகம், சென்னை, 2010.
4. நச்சினார்க்கினியர். தொல்காப்பியம் பொருளதிகாரம் உரை. திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1964.
5. பக்தவத்சல பாரதி. பண்பாட்டு மானுடவியல். மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2003.
6. வானமாமலை, நா. தமிழர் பண்பாடும் தத்துவமும். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1980.
7. Arnold van Gennep, The Rites of Passage, Translated by Monika B. Vizedom and Gabrielle L. Caffee, Routledge & Kegan Paul, London,1960.
8. Michel Foucault, The History of Sexuality, Vol. 1: An Introduction, Translated by Robert Hurley, Vintage Books, New York, 1990.
9. Claude Lévi-Strauss, The Elementary Structures of Kinship, Beacon Press, Boston, 1969.
10. mber, Carol R., & Ember, Melvin, Anthropology (12th ed.). Upper Saddle River: Pearson Prentice Hall. (2007).